**திருவண்ணாமலை வணிகவரி மாவட்ட துணை ஆணையர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை – திருமதி.பா.கீதா பாரதி, பி.ஆர்க்.,**

ந.க.12/2016/அ1 நாள்:31.07.2019

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - வேலூர் கோட்டம் - திருவண்ணாமலை வணிகவரி மாவட்டம் - துணை ஆணையர்(மாநிலவரி) அலுவலகம், திருவண்ணாமலை – திருமதி.எம்.புவனேஸ்வரி, தட்டச்சர் -தகுதி காண் பருவம் நிறைவு - ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) செயலாளர் /தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணயம், சென்னை–3 அவர்களின் கடித எண். 966/PSD-A1/2016, நாள்:07.09.2016.
2) இணை ஆணையர் (வணிகவரி) வேலூர் கோட்டம் வேலூர் அவர்களின் செ.மு.ந.க. ஆ2/6570/2016, நாள்: 18.10.2016.
3) இவ்லுவலக செயல்முறைகள் ந.க.அ1/12/2016 நாள்: 24.10.2016.
4) மாநில அளவிலான கூர்நோக்கு குழு செயலர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.7821/CV-6/2017-7, நாள்: 24.06.2019
5) இவ்லுவலக செயல்முறைகள் ந.க.அ1/12/2016 நாள்:19.07.2019.

********

பார்வை ஒன்றில் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி தொகுதி-4 2013-2014 மற்றும் 2014-2015 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை இரண்டில் காணும் செயல்முறைகளின்படி திருவண்ணாமலை வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை மூன்றில் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளின்படி திருவண்ணாமலை துணை ஆணையர்(மாநிலவரி) அலுவலகத்தில் திருமதி.எம்.புவனேஸ்வரி என்பவர் தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டார். தனியாளருக்கு பார்வை நான்கில் காணும் செயல்முறைகளின்படி இன மெய்த்தன்மை வரப்பெற்றதைத் தொடர்ந்து அவர் பணியில் சேர்ந்த நாளான 26.10.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும் தகுதி காண் பருவம் தொடங்கியும் பார்வை 5-ல் காணும் செயல்முறைகளின்படி ஆணையிடப்பட்டது.

பார்வை 5-ல் காணும் செயல்முறைகளின்படி தனியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டுமெனவும் தகுதிகாண் பருவகாலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் மற்றும் Computer on Office Automation தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணையிடப்பட்டது.

தனியாளர் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் மற்றும் Computer on Office Automation தேர்விலும் தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே இத்தனியாளருக்கு பார்வை 1-ல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்உள்ள நியமன நிபந்தனையின் அடிப்படையில் தனியாளர் தனது தகுதிகாண் பருவத்தினை 25.10.2018 அன்று பிற்பகல் திருப்திகராமாக நிறைவு செய்துள்ளார் என ஆணை வழங்கப்படுகிறது.

"Declaration of probation is subject to the final outcome of the Writ Petitions/cases relating to Tamilnadu Ministrial Service Group-IV for the year 2013-14 and 2014-15 pending on the files of the Hon'ble High Court Madras/Madurai Bench of Madras High Court and other criminal cases relating g to this recruitment".

தனியாளர் இரண்டாவது மற்றும் தொடர் வருடாந்திர ஊதிய உயர்வுகளை அடிப்படை விதிகளின்படி வழங்கலாம் எனவும் நிலுவைத் தொகைகளை பெறத்தகுதியுடையவராகிறார் எனவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

துணை ஆணையர்(மாநிலவரி),
திருவண்ணாமலை.

பெறுநர்
திருமதி.எம்.புவனேஸ்வரி,
தட்டச்சர்,
துணை ஆணையர்(மாவ) அலுவலகம்,
திருவண்ணாமலை.

நகல் - இணை ஆணையர்(வணிகவரி), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் - உபரி-1.